விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 039 வள்ளுவர் ஆண்டு 2057 தை 13 செவ்வாய்க்கிழமை (27.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வீட்டுத்திட்டக் கொடுப்பனவுகளை வழங்குக

## யாழ்.மாவட்ட செயலகம் முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



### அரச அதிபரிடம் மகஜரும் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடை 04ஆம் பக்கம் பார்க்க

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பில்

## காணாமல்போன இளைஞன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் காணாமல்போன சிறந்த துடுப்பாட்ட வீரரான இளைஞன் நேற்று கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சாம்சன் (வயது-24) என்ற இளைஞனே சடலமாக மீட்கப் 15ஆம் பக்கம் பார்க்க



# மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம்

## பணிப் புறக்கணிப்பில் ஈடுபடும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அரசாங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம்எனபணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தை எச்சரித்தார் பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜயமுனி.

(03ஆம் பக்கம் பார்க்க)

வலம்புரி நாளிதழ் நடத்தும்

## பொது அறிவுப் போட்டி - 2026



உள்ளே...

## துன்னாலை வீதி மூடப்படுகின்றது 15

அரச வைத்தியசாலையில்

## சோதனைக்குழாய் கருத்தரிப்பு சிகிச்சை

(கொழும்பு)

கொழும்பு காசல் மகளிர் அரச மருத்துவமனையில் மிக விரைவில் சோதனைக்குழாய் கருத்தரிப்பு (In Vitro Fertilization - IVF) சிகிச்சை முறை அறிமுகப்படுத் 15ஆம் பக்கம் பார்க்க

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள

## குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

நீதிமன்றத்தைப் புறக்கணித்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வருதல் மற்றும் அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்து 15ஆம் பக்கம் பார்க்க

சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டம் நடத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி உதயநகரில் ரயில் மோதியதில் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகரில் ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சபாபதி (வயது-82) என்பவரே உயிரிழந்தவராவார்.


துவிச்சக்கரவண்டியில் புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்டபோது அநுராதபுரத்திலிருந்து யாழ். நோக்கிப் பயணித்த ரயில் மோதியதிலேயே குறித்த நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

(ம-7,316)

அன்பு வாசகர்களே!
மிக விரைவில்
உங்கள்
வலம்புரியில்
புருசோத்தமன்
எழுதும்
**தரிசனம்**
வாசிக்கத் தவறாதீர்கள்

தருமபுரம் சுண்டிக்குளத்தில்

## கப் ரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு



(கிளிநொச்சி)


தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளத்தில் கப் ரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. கா. இராமச்சந்திரன்** அவர்களின்
அன்புத் தந்தை

## திரு. அருணாசலம் கார்த்திகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மண்ணில் 24.07.1934
விண்ணில் 20.01.2026

பிரிவுத்துயருடன்...
**சேவையாளர் சங்கம்**
**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

(1987)

## மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள் கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு வடக்கு மாகாண சபை

**1. பெண் சாதனையாளர்களைக் கௌரவித்தல் - சர்வதேச மகளிர் தினம் 2026**

எமது அமைச்சினால் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களிலிருந்து சாதனையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

பின்வரும் துறைகள் சார்பில் பெண் சாதனையாளர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் **(பெண்கள் நலன் சார்ந்த சமூக சேவைகள் துறை, தொழில் முயற்சியாளரும் ஏற்றுமதியாளரும், விளையாட்டுத்துறை, கலை, இலக்கிய, ஊடகஎழுத்துத்துறை, மாற்றுத் திறனாளியாகவுள்ள பெண் சாதனையாளர்கள்)**

**2.மகளிர் தினத்தை ஒட்டிய ஆக்கத்திறன் போட்டி -திறந்தபிரிவு**

எமது அமைச்சினால் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு நடாத்தப்படும் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிக்காக வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவு அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி சாதனையாளர்கள் தெரிவு, போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், அடப்பன் வீதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது மின் அஞ்சல் npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல 021 222 0883/ 021 222 0884 ஊடாகவோ அல்லது பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண தொழில்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவைகள் உத்தியோகத்தரை தொடர்பு கொள்வதன் மூலமோ போட்டி நுழைவிற்கான விண்ணப்பம் மற்றும் விதி முறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பத்தினையும் பெற்றுக்கொள்ள https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தினையும் https://www.facebook.com/ministry of women affairs எனும் பேஸ்புக் சமூக ஊடகத்திலும் பார்வையிட முடியும்.

- 23.02.2026 ஆம் திகதிக்கு முன்னர் எமது அமைச்சிற்கு நேரடியாகவோ, பதிவுத் தபாலிலோ கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பங்களினை அனுப்பிவைக்கமுடியும் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவையும் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.
- விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி :

**செயலாளர்,**
**மகளிர் விவகாரம், சமூக சேவைகள், கூட்டுறவு, தொழிற்துறை அமைச்சு,**
**வடக்கு மாகாண சபை,**
**அடப்பன் வீதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

மு.நந்தகோபாலன்
செயலாளர்

மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாண சபை.

(C-4889)

# மரண அறிவித்தல்

மண்ணில் 27 . 01 . 1939



விண்ணில் 24 . 01 . 2026

## தியாகராசா சிவகாமியம்மா (கமலம்)

வருணன் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சிவகாமியம்மா(கமலம்) அவர்கள் 24.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராசாவின் பாசமிகு துணைவியாரும் காலஞ்சென்றவர்களான நாகராசா, சிவஞானரத்தினம், சிவசுப்பிரமணியம், சிவதாசன், வைகுந்தன் மற்றும் சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கோசலையம்மா, சபாநாயகம், பரமேஸ்வரி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் குமரகுருபரன் (UK), ராகினி, நந்தகுமார்(UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீதா(UK), ஜெசி(UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷஜிந்தன், ஜெஷிந்தன், அக்ஷயா, மயூரி சோபியா, சயூரி இசாபெலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2026) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வருணன் தீத்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வருணன்,
அச்சுவேலி.

நந்தன் (மகன்) : (UK) + 447391231514
குமரன் (மகன்) : (UK)+447450363595

தகவல்:
குடும்பத்தினர்

(1989)

# மரண அறிவித்தல்



## திருநாவுக்கரசு மல்லிகாதேவி

யாழ். கட்டுவன் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இராஜவீதி கோப்பாய் தெற்கு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட மல்லிகாதேவி திருநாவுக்கரசு அவர்கள் 26.01.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் தபால் திணைக்களம், யாழ்.) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற சுமங்களா முருகதாஸ், திருமயூரன் (நிறைவேற்றுப் பணிப்பாளர், CCH) அவர்களின் அன்புத் தாயாரும் முருகதாஸ் (கணக்காளர், சமுர்த்தி மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) மஞ்சுளா அவர்களின் அன்பு மாமியாரும் மற்றும் கீர்த்திகன், வேணுஜன், ஆத்மிகா, ஷாமந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் அன்னரத்தினம் (கனடா) மற்றும் காலஞ் சென்றவர்களான பாலரத்தினம், மணியம், புஸ்பராசா, செல்வராசா, அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.01.2026 இன்று செவ்வாய்க்கிழமை இராஜவீதி, கோப்பாய் வடக்கு கோப்பாயிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் பகல் 01.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இராஜ வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 284 9599, 075 045 101

(6665)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 77ஆவது குடியரசு தினம் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், இந்திய தேசியக் கொடியேற்றி நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் யாழ். இந்தியத் துணை தூதுவர் சாய்முரளி இந்திய தேசிய கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசுதின வாழ்த்து செய்தி வாசிக்கப்பட்டு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்கள் :- சிவசாந்தன்)

## மனித உயிர்...

நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் அனைத்து பணத்தையும் வழங்கினாலும் கூட, அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அரசியல் நோக்கங்கள் நிறைவேறாது.

அரசாங்கம் குறைந்தபட்ச அதிகாரத்தைக்கூட இதுவரையில் பயன்படுத்தியதில்லை.

மருத்துவர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அரசுக்கு கிடைக்கும் நிதி வசதிகளுக்கு ஏற்ப அந்த பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

மேலும், சுமார் நூறு ஆண்டுகளாக இயங்கிவரும், தற்போது பக்குவ நிலை அடைந்திருக்க வேண்டிய ஒரு தொழிற்சங்கம் இவ்வளவு கட்டுப்பாடின்றி செயற்படுவது குறித்து கேள்வி எழுகிறது என்றார்.

நோயாளிகளை முன்வைத்து தங்களது கோரிக்கைகளை முன்னெடுக்க முயல்கிறார்கள் எனவும் மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

பணிக்கு திரும்பி சேவை செய்யுமாறு நாங்கள் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம் எனவும் சங்கம் இதுவரை தங்களால் செய்யக்கூடிய அதிகபட்ச நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# யாழில் உயிர்நீத்த இந்திய இராணுவத்தினருக்கு அஞ்சலி!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இந்தியப் படையினரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில், இந்திய துணைத் தூதுவர் எஸ். சாய் முரளி அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினமான நேற்று திங்கட்கிழமை பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்திய இராணுவத்தினரின் நினைவிடத்திற்கு இந்தியத் தூதுவர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான போர் நடவடிக்கைகளின் போது உயிர்நீத்த இந்திய இராணுவத்தினரின் நினைவாக பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. (8)

# மரண அறிவித்தல்

## சரஸ்வதி துரைராசா



தோற்றம் : 14.08.1940 மறைவு : 25.01.2026

மண்டுமண்டையைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி துரைராசா அவர்கள் 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ந.துரைராசா அவர்களின் அன்பு மனைவியும் மார்க்கண்டு, நடராசா, கதிரமலை, ஞானம்மா, இராசேந்திரம் ஆகியோரின் சகோதரியும் கேதீஸ்வரன் (அவுஸ்திரேலியா), தார்வேந்திரா (மஸ்கன்ட் - கொழும்பு), கேதீஸ்வரி (கல்வியங்காடு) ஆகியோரின் தாயாரும் அத்திலா (அவுஸ்திரேலியா), மாலதி (நிர்வாக உத்தியோகத்தர், கொழும்பு), நித்தியானந்தன் (அதிபர், யா/கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் நிரோசா, அகீர்த், டிப்னேஸ், தனுஸ், நிதூஜனன், சஞ்சீவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2026) செவ்வாய்க்கிழமை 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு (பால் பண்ணை) எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகன் - 0774939442, 077 821 8249
மகள் - 076 604 5351

தகவல்: குடும்பத்தினர்

(6667)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## குலதீபன் பிருந்தா

(தாதிய உத்தியோகத்தர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)

தோற்றம் 12.01.1985 மறைவு 27.01.2019



எங்கள் பாசமிகு தங்கையே
உன்னைப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் ஆனதே
உன் பிறந்த மாதத்திலே உன்
உயிரை காலன் பறித்ததேனோ
விதியின் விளையாட்டோ
எங்கள் உள்ளம் உன்னை
நினைக்கின்றபோதே
மெழுகாய் உருகிறதே

சிரித்து மகிழ்ந்த நாட்களெல்லாம்
நிழல் தேடும் நினைவுகளாய்
பாசத் தொட்டிலில் ஆடிய உறவு
மறைந்து போனதே மாயமாய்

நீ தந்த நினைவுகள்
எங்கள் உயிரோடு வாழும்
நீ உதிர்ந்த மலர் இன்று
உன் முகமாக எங்கள் முன்
உன் நினைவை மறக்காதிருக்க
என்றுமே எங்களுடன்
மீண்டும் ஒரு பிறவி இருந்தால்
எங்கள் தங்கையாகவே பிறந்து வா

மாசேரி, வரணி

தகவல்:- மகள் குயின்சிகா
அம்மா, அக்காமார்,
பெறாமக்கள் மைத்துனர்கள்

(C-4894)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட...

முறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான மிகுதிக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்றுத் திங்கட் கிழமை (26) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட செயலக முன்றலில் வைத்து குறித்த வீட்டுத்திட்டப் பயனாளிகள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனைச் சந்தித்து கலந்துரையாடி தமது கோரிக்கை மனுவை கையளித்தார்கள்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வீட்டுத்திட்டப் பயனாளிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

2019ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இன்றுவரையும் தமக்கு வழங்கப்படவில்லை எனவும் இதனால் வீட்டுத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாகவும் குடியிருந்த தற்காலிக வீடுகளை அகற்றியுள்ளதாகவும் கடன்பட்டும் வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாகவும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்க்கையை நடத்திவருவதாகவும் தமது பக்க நிலைமைகளை தெரிவித்தார்கள்.

இதற்குப் பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர்,

இவ் விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் 2018ஆம் ஆண்டு 1883 வீடுகளும் 2019ஆம் ஆண்டு 1933 வீடுகளுமாக மொத்தமாக 3816 வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு பகுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய மிகுதி கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக வீடமைப்பு நிர்மாணிப்பு அமைச்சர் மற்றும் துறைசார் திணைக்களங்களுடனும் கலந்துரையாடியுள்ளதாகவும் மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் ஆராயப்பட்டுள்ளது எனவும், உங்களது கோரிக்கைகள் தொடர்பில் தங்களால் கையளித்த கோரிக்கை மனுவினை உரியவர்களுக்கு தெரியப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ்வாண்டு இத் திட்டங்களில் உள்ள 66 வீடுகளுக்கு தலா 10 இலட்சம் வீதம் ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையினை கழித்து பயனாளிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ம-7,33)


# வேலணை பிரதேச சபை - வேலணை

## வேலணை வங்களாவடிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகள் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 27.01.2026 முதல் 10.02.2026 வரை (அலுவலக நாட்களில் மு.ப- 9.00 மணி முதல் -பி.ப 3.00 மணி வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 11.02.2026 (புதன்கிழமை) பி.ப 02.00மணி வரை

கேள்வி திறக்கும் திகதி :- 11.02.2026 (புதன்கிழமை) பி.ப 02.00 மணி

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த அடிப்படைக் கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|---|
| வங்களாவடிச் சந்தி, வேலணை | | | | | |
| கடை இல 1 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |
| கடை இல 3 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |
| கடை இல 4 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |
| கடை இல 5 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |
| கடை இல 6 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |
| கடை இல 7 | 240 | 7,500.00 | 1,800,000.00 | 2000.00 | 27,000.00 |

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச் சந்தி, வேலணை எனும் முகவரிக்கு 11.02.2026 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் குறித்த காலப் பகுதிக்குள் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

### நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரர் இலங்கை பிரஜையாக இருப்பதுடன் வேலணை பிரதேச செயலக எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.

04. ஆகக் குறைந்த அடிப்படை கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

05. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு அவற்றில் சித்தி பெற்ற ஒரு கடை மட்டுமே வழங்கப்படும் அவ்வாறு வழங்கப்படும் ஒரு கடையும் அவரால் கோரப்பட்ட ஆகக் கூடுதலான கேள்வித் தொகை கொண்ட கடை மட்டுமே வழங்கப்படும். இவ் நிபந்தனையை மீறும் பட்சத்தில் அவரது அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு கேள்வி பெறுவதற்கு தகுதி அற்றதாக கணிக்கப்படும் இது தொடர்பான வைப்புத் தொகை எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.

08. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.

09. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கை துணை அல்லது அவரது வாரிசு உரிய அனுமதியினைப் பெற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்.

10. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் எழுத்து மூல அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

11. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய திறப்புப் பணத்தினை (Key Money) முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

13. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்புப் பணத் தொகை (Key Money) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

14. பெற்றுக் கொள்ளும் கடைகளில் ஏற்படும் இயற்கை அனர்த்தம் தவிர்ந்த பாதிப்புகளுக்கு வாடகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.

15. கடைகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை நிலுவைகளின்றி, இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் தாங்களே செலுத்துதல் வேண்டும்.

16. திண்ம மற்றும் திரவ கழிவுகள் தொடர்பில் சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றினை அகற்றுதல் வேண்டும்.

17. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, அருவருப்பான பொருட்களோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது அல்லது வைத்திருத்தல் தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.

18. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் வாடகைத் தொகையின் 10 வீதத்தினை தண்டப் பணமாக சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

19. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் வேலணை உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

20. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

குறிப்பு :-
விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் போது கிராம சேவை உத்தியோகத்தரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றுடன் வருகை தருதல் வேண்டும்.

திரு.சிவலிங்கம் அசோக்குமார்
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை,
வேலணை.

(C-4891) 27.01.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவையில் 213 பேர் புதிதாக இணைப்பு

(கொழும்பு)

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக 213 பேருக்கு இன்று நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த 2025 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இது இதற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக 226 பேரை ஆட்சேர்ப்பு செய்ய அனுமதி கிடைத்திருந்த நிலையில், திறந்த போட்டிப் பரீட்சையின் படி தகுதி பெற்ற 246 பேர் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு, இந்த 213 பேர் அப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 2,617 ஆக உள்ளதுடன், 1,906 பேர் தற்போது சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ளனர். (3)

# காணிகளை நன்கொடையாக வழங்க

## கொடையாளர்களுக்கு அரசாங்கம் அழைப்பு

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவால் வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் அரசாங்கத்தால் தற்போது நடைபெற்று வருகிறது.

நாடு முழுவதும் உள்ள நன்கொடையாளர்கள் அந்த வீடுகளைக் கட்டத் தேவையான நிலத்தை நன்கொடையாக வழங்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை www. rebuildingsrilanka. gov.lk என்ற வலைத்தளத்திலோ அல்லது 1800 என்ற தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலமோ பெறலாம். மேலும் நில நன்கொடையாளர்கள் பற்றிய தகவல்களை 011 233 1246 என்ற தொலைநகல் எண்ணுக்கும் அனுப்பலாம்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து நன்கொடையாளர்களும் "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" திட்டத்துடன் தீவிரமாக கைகோர்க்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-8)

# மீன்பிடி போர்வையில் போதைப்பொருள்; கடத்தல் காரர்களுக்கு இனி இடமில்லை

## பாதுகாப்பு பிரதியமைச்சர் ஆவேசம்

(யாழ்ப்பாணம்)

**மீன்பிடி நடவடிக்கைகள் என்ற போர்வையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களும், அவர்களுக்குத் துணைநின்றவர்களும் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது. இக்கடத்தலை ஒடுக்கும் பொறுப்பை முப்படைகளும் பொலிஸாரும் முழுமையாக நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளனர். ஆகையால் நாட்டிற்குள் போதைப் பொருட்களைக் கொண்டு வரும் கடத்தல் காரர்களுக்கு இனி அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருணஜயசேகர தெரிவித்தார்.**

தெற்குக் கடற்பரப்பில் வைத்து பெருமளவான போதைப்பொருளுடன் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகு, கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன்போது முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அங்கு விஜயம் செய்திருந்த பாதுகாப்பு பிரதி அமைச்சர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பல முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. அதன் ஒரு முக்கிய அங்கமாக, ஜனாதிபதியின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ், பாதுகாப்பு அமைச்சின் நேரடி மேற்பார்வையில் முப்படைகள், பொலிஸார் மற்றும் அனைத்துப் புலனாய்வுப் பிரிவுகளும் ஒன்றிணைந்து "முழு நாடும் ஒன்றாக" என்ற தேசிய நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

ஆகையால் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இனி நாட்டுக்குள் நுழைய எவ்வித வாய்ப்பும் இல்லை. தேசிய பாதுகாப்புக்கும் பொதுமக்களின் நல்வாழ்வுக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் போதைப்பொருள் கடத்தலுக்கு எவ்விதத்திலும் இடமளிக்கப்பட மாட்டாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

மீன்பிடி நடவடிக்கைகள் என்ற போர்வையில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களும், அவர்களுக்குத் துணை நின்றவர்களும் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# இலங்கையிலிருந்து புறப்பட்டது இந்தோனேசிய கடற்படைக் கப்பல்



(கொழும்பு)

இந்தோனேசிய கடற்படைக் கப்பல் 'KRI SULTAN ISKA NDAR MUDA - 367' விநியோக மற்றும் சேவை தேவைகளை முடித்த பிறகு இலங்கையிலிருந்து புறப்பட்டுள்ளது.

விநியோக மற்றும் சேவை தேவைகளை மேற்கொள் வதற்காக ஜனவரி 22 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த இந்தோனேசிய கடற்படைப் போர்க்கப்பல் ஜனவரி 23 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டது.

மேலும் கொழும்பு துறை முகத்தில் கடற்படை மரபுப்படி இலங்கை கடற்படையினர் குறித்த கப்பலுக்கு பிரியாவிடை அளித்தனர்.

இந்த விஜயத்தின் போது, கப்பலின் கட்டளை அதிகாரி யாக, கமாண்டர் Annugerah Anurullah, மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜகத் குமாரவுடன் கட்டளைத் தலைமையகத்தில் உத்தியோகபூர்வ சந்திப்பை மேற்கொண்டதுடன், மேலும், குறித்த கப்பல் தீவில் தங்கியிருந்த காலத்தில், கொழு ம்புப் பகுதியில் உள்ள கவர்ச் சிகரமான சுற்றுலாத் தலங் களை பார்வையிடும் பயணத்திலும் கப்பலின் பணியாளர்கள் பங்கேற்றனர். (8)

யாழ்.நகரத்தின் மத்தியில் காணப்படும் புல்லுக்குளம் சூழல் ஆர்வலர்களால் தூய்மைப்படுத்தப்பட்டது.

குறித்த தூய்மைப் பணி முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மட்டுவில் ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 300 | 500 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 150 | 160 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 | 500 | 600 |
| தக்காளி | 550 | 550 | 600 | 700 | 500 | 460 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 250 | 220 |
| கரட் | 300 | 430 | 400 | 450 | 400 | 350 |
| பூசணி | 100 | 120 | 120 | 150 | 120 | 80 |
| புடோல் | 200 | 250 | 300 | 300 | 250 | 220 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 250 | 300 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 400 | 180 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 160 | 180 | -- |
| பாகற்காய் | 500 | 700 | 700 | 800 | 500 | 400 |
| வெண்டக்காய் | 350 | 350 | 300 | 400 | 300 | 350 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 500 | 800 | 600 | 150 | 470 |
| லீக்ஸ் | 400 | 300 | 300 | 400 | 400 | 380 |
| பீற்றூட் | 450 | 450 | 600 | 600 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 800 | 700 | 850 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 450 | 600 | 500 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 280 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 150 | 120 | -- | 170 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | -- | 450 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 | 200 | 130 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 50 | 50 | 100 | 100 | -- | 80 |
| [illegible] | 100 | -- | 100 | 140 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இளம் எழுத்தாளர்களின் படைப்பிலக்கிய அரங்கேற்றம் மாணவிகளான செல்வி பேரின்பகுமார் ஆகவி மற்றும் செல்வி பேரின்பகுமார் ஆதுரி ஆகியோரின் "பாட்டொன்றைப் பாடுவோம்" சிறுவர் பாடல் தொகுப்பு மற்றும் "பிறந்த நாள் சட்டை" சிறுவர் கதை ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30மணியளவில் சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையினை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் இ. புஸ்பரட்ணம் அவர்களும், வெளியீட்டுரையினை மக்கள் கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் சபா தனுஜன் அவர்களும் நூல் அறிமுக உரைகள் வரிசையில் "பாட்டொன்றைப் பாடுவோம்" நூல் பற்றி ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் சோ.சிவனேஸ்வரன் அவர்களும், "பிறந்தநாள் சட்டை" புத்தகம் பற்றி மகாஜனக் கல்லூரி ஆசிரியர் ந.தவசோதிநாதன் அவர்களும், ஏற்புரையினை நூலாசிரியர் பேரின்பகுமார் ஆகவி அவர்களும், நன்றியுரையினை நூலாசிரியர் பேரின்பகுமார் ஆதுரி அவர்களும் ஆற்றவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான மக்கள் கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (8)

# முல்லைத்தீவு கடற்கரையில் மாபெரும் பட்டத்திருவிழா



(நெளுக்குளம்)

வட்டுவாகல் புலம்பெயர் உறவுகளும், பொது மக்களும் இணைந்து நடத்திய மாபெரும் பட்டத் திருவிழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு சுற்றுலாமைய நகரக் கடற்கரையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இவர்களோடு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதுடன் 500 மேற்பட்ட பட்டங்களும் பறக்கவிடப்பட்டன. விசேடமாக சிறார்களை ஊக்குவிக்கும் நோக்கில் பட்டங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (8-299)

# தென்னிந்திய கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை நடன நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றமும் யாழ் இந்திய துணைத்தூதரகமும் இணைந்து தென்மராட்சி மண்ணில் முதன்முறையாக நடத்துகின்ற "தென்னிந்திய கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை" எனும் நடன நிகழ்வு இன்று செவ்வாய்கிழமை மாலை 5.30 மணிக்கு நகராட்சி மன்றத்தின் பொன் விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு யாழ் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் தென்னிந்திய கலைஞர்களின் கதகளி மற்றும் மோகினியாட்டம் ஆகிய ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (8-30)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில், சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு ஐக்கிய இராய்ச்சியம் நிதிப்பங்களிப்புடன் துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 50 மாணவர்களுக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 100 மாணவர்களுக்கும் துணுக்காய் வர்த்தக சங்க மண்டபத்திலும், மாந்தை கிழக்கு பிரதேசசபை மண்டபத்திலும் குறித்த கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (8-299)

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும்

## பொது அறிவுப் போட்டி - 2026

**நிபந்தனைகள்**

- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.
- போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவருகின்ற பொது அறிவு வினாக்களுக்கு அந்தப் படிவத்திலேயே விடையளிக்க வேண்டும்.
- 2026 ஜனவரி 23, 24, 25, 26, 27 ஆகிய ஐந்து நாட்களில் ஒவ்வொரு நாளும் பத்துக் கேள்விகளாக, மொத்தம் 50 கேள்விகளுக்கு விடையளித்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து **வலம்புரி, இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு சாதாரண தபாலிலோ அன்றி நேரிலோ ஒப்படைக்க வேண்டும்.
- தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொது அறிவுப் போட்டி - 2026 எனக் குறிப்பிடவும்.

**முடிவு திகதி : 03.02.2026**

**பரிசு விபரம்**

- போட்டியில் 50 வினாக்களுக்கும் சரியான விடை அளித்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில், குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்.
- சரியான விடையெழுதியவர்களின் பெயர் விபரம் வலம்புரியில் வெளிவரும்.

- **முதல் பரிசு : 10, 000/=**
- **இரண்டாம் பரிசு : 7, 500/=**
- **மூன்றாம் பரிசு : 5, 000/=**
- **2000/= 10 ஆறுதல் பரிசுகள்**

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும் பொதுஅறிவுப் போட்டி - 2026**

பொது அறிவுப் போட்டி - 05

41. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்?
..............................................................

42.தேம்பாவணி நூலைத் தந்தவர்?
..............................................................

43.இஸ்லாமியர்களின் புனித நூல்?
..............................................................

44. சீறாப்புராணத்தை இயற்றியவர்?
..............................................................

45. கந்தபுராணத்தை தந்தருளியவர்?
..............................................................

46.சதுர்வேத அகராதியை எழுதியவர்?
..............................................................

47. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கத்தோலிக்க பாதிரியார்?
..............................................................

48. பாலாவி தீர்த்தம் அமைந்த இடம்?
..............................................................

49. யாழ்ப்பாணத்தில் மரநடுகையில் ஈடுபட்டு சிவதர்மவள்ளல் எனப் போற்றப்பட்டவர்?
..............................................................

50.யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட கல்லூரியின் பெயர்?
..............................................................

போட்டியாளரின் முழுப்பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

பிறந்த திகதி: ..............................................................

தொலைபேசி இலக்கம்: ..............................................................

திகதி: ............ ஒப்பம்: ............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சஜித் இணைவு

## எமக்குப் பாதிப்புமில்லை - பயமுமில்லை

### அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

**ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஓரணியில் இணைவதால் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில,

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த நாட்டை அழித்த கட்சிகள். இந்த இரண்டு கட்சிகளும் இணைகின்றமையால் , புதிய கூட்டணி அமைகின்றமையால் எமது ஆட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது.

தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டின் முன்னேற்றத்துக் காகவும், மக்களின் நலனுக்காகவும் செயற்படுகின்றது. நாட்டு மக்கள் எம் பக்கமே உள்ளனர். எனவே, ரணில் - சஜித் தரப்பினர் சேர்ந்தால் என்ன, சேராவிட்டால் என்ன எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

## ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக பன்னிரு திருமுறை ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும் 26 ஆவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளின் நூற்றாண்டு விழா நிகழ்வானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு கொழும்பு, அகில இலங்கை இந்துமாமன்றத்தில் இடம் பெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமதி காந்திமதி செல்வராஜ், சிறப்புரையை இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தன், வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் விளக்கவுரையினை தருமை ஆதீன திருமறை வகுப்புகளின் பொறுப்பாளர் சிவகௌரி கிரிஷ் குமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## மண்மேட்டில் மோதிய பேருந்து

### அதிஷ்டவசமாக தப்பிய பயணிகள்



(கொழும்பு)

கட்டுப்பாட்டையிழந்த பேருந்து ஒன்று மண் மேட்டுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் ஹற்றன்- கொழும்பு பிரதான சாலையில் உள்ள கினிகத் தேன கடவல பகுதியில் உள்ள மஹா வாங்குவா பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தலவாக்கலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடவத்த அரச போக்குவரத்து சபை பேருந்து ஒன்றே கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்து நடந்த நேரத்தில் பேருந்தில் சுமார் 80 பயணிகள் இருந்தனர். எனினும் எவருக்கும் காயமின்றி அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

விபத்தையடுத்து பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் அந்தப் பயணிகளை வேறொரு பேருந்தில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர்.

விபத்து குறித்து கினிக்கத்தேன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணிப்பின் பேரில் கினிக்கத்தேன பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

## இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் டொலராக உயர்வு

(கொழும்பு)

இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டை விட 5.6 சதவீத வளர்ச்சியாகும்.

இதில் சரக்கு ஏற்றுமதி மூலம் 13.57 பில்லியன் டொலர்களும், சேவை ஏற்றுமதி மூலம் 3.67 பில்லியன் டொலர்களும் வருவாயாகக் கிடைத்துள்ளன.

நாட்டின் பொருளாதார மீட்சியில் ஏற்றுமதித் துறை முக்கிய பங்கு வகிப்பதாக இந்த தரவுகள் காட்டுகின்றன.

பொருளாதார ரீதியிலான சவால்களுக்கு மத்தியிலும், ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் நாட்டின் வர்த்தக சமநிலைக்கு வலுச்சேர்ப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது (8)






இணுவில் கந்தசுவாமி கோவில்

தைப்பூசம், உலகப் பெருமஞ்சத் திருவிழா-2026

கடைகளுக்கான இடம் வழங்கல்

01.02.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பெருமஞ்சத் திருவிழாவின்போது கடைகளை அமைக்கும் வியாபார நிலைய உரிமையாளர்கள் கடைகளுக்கான இடங்களை பெற்றுக்கொள்வதற்காக 29.01.2026 வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறும் கூட்டத்தில் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து வியாபாரநிலையம் அமைப்பதற்கான ஏலத்தில் பங்குபற்றி வியாபார நிலைய தற்காலிக இடத்தினைப் பெறமுடியும். ஏலத்தில் பங்குபற்றி தெரிவு செய்யப்படும் இடத்திற்கான கொடுப்பனவை உடனடியாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும்.



இணுவில் கந்தசுவாமி கோயில்
தைப்பூச பெருமஞ்ச கலை பண்பாட்டுமன்றம்
075 940 2236

[1986]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிலிப்பைன்ஸில் பயணிகள் படகு கவிழ்ந்து விபத்து

- 15 பேர் உயிரிழப்பு
- பலர் மாயம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் தெற்கு பசிலான் மாகாணத்தின் பசிலான் கடற்பகுதியில் 350இற்கும் அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்ற பயணிகள் கப்பல் ஒன்று கவிழ்ந்ததில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

MV Trisha Kerstin 3 எனும் பயணிகள் கப்பல், சாம்போங்கா துறைமுக நகரிலிருந்து புறப்பட்டு தெற்கு சூலு மாகாணத்தின் ஜோலோ தீவுக்குச் சென்றுகொண்டிருந்த போதே நேற்று நள்ளிரவு விபத்துக்குள்ளானது.

பிலிப்பைன்ஸ் கடற்துறையினரின் தகவலின் படி, அந்த கப்பலில் 332 பயணிகளும், 27 பணியாளர்களும் பயணித்துள்ளனர்.


இந்நிலையில், இதுவரை 316 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் 28 பேர் காணாமல் போயுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீட்கப்பட்டு மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டவர்கள் பசிலான் தலைநகர் இசபெலா நகரிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கப்பல் மூழ்கியதற்கான காரணம் தெரியவில்லை என்றும், இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்றும் அந்நாட்டு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை, மிந்தனாவிலிருந்து சீனாவுக்கு சென்றுகொண்டிருந்த சிங்கப்பூர் கொடி ஏந்திய சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியதில், குறைந்தது இரண்டு பிலிப்பைன்ஸ் கடற்பணியாளர்கள் உயிரிழந்ததுடன், 15 பேர் மீட்கப்பட்டனர்.

மேலும் நால்வர் காணாமல்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



## அமுலிலுள்ள போர்

## கம்போடியாவை வம்பி



(பாங்காக்)••••••

தென்கிழக்கு
களான தாய்லாந்து
இடையே போர் நி
அமுலில் இருக்கி
தாய்லாந்து மீ
மீறலில் ஈடுபட்டு
போடியா குற்றஞ்ச

தாய்லாந்து - கம்போடியா இடையே நீண்டகாலமாக எல்லை பிரச்சினை நீடித்து வருகிறது. கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட மோதலின்போது, எல்லைப் பகுதியான ஆன்செஸ் பகுதியில் 27 அடி உயரமுள்ள விஷ்ணு சிலையை தாய்லாந்து இராணுவம் இடித்து தகர்த்தது.

ஆன்செஸ் பகுதி தங்களுக்கு சொந்தமான இடம் என்றும், இடிக்கப்பட்ட விஷ்ணு சிலை வழிபாட்டில் இல்லை என்றும் அதற்கு தாய்லாந்து விளக்கம் கொடுத்தது.

மேலும் பாதுகாப்பு மற்றும் நிர்வாக காரணங்களுக்காகவே சிலை இடித்து அகற்றப்பட்டதாகவும் கூறியிருந்தது.

இதனால், இரு நாட்டுக்கும் இடையே மோதல் அதிகரிக்கும் வாய்ப்பு உருவானது.

## சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர எமக்கு எந்த நோக்கமும் கிடையாது

### கனடா பிரதமர் மார்க் கார்னி

(ஒட்டாவா)

சீனாவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர கனடாவிற்கு எந்த நோக்கமும் இல்லை என்று பிரதமர் மார்க் கார்னி விளக்கமளித்துள்ளார்.

கனடா, சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டால், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற ட்ரம்பின் மிரட்டலுக்குப் பதிலளிக்கும் விதமாக இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.


சீனாவுடனான தனது சமீபத்திய ஒப்பந்தம், சமீபத்தில் வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட சில துறைகளில் மட்டுமே வரிகளைக் குறைத்துள்ளது என்று கார்னி தெரிவித்துள்ளார்.

மேலும், அமெரிக்கா மற்றும் மெக்சிகோவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், முன் அறிவிப்பு இல்லாமல் சந்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ர் நிறுத்த ஒப்பந்தம்;
# ழுக்கும் தாய்லாந்து!

கு ஆசிய நாடு
து - கம்போடியா
றுத்த ஒப்பந்தம்
ின்ற நிலையில்
ண்டும் அத்து
வருவதாக கம்
சாட்டியுள்ளது.



இந்நிலையில், விஷ்ணு சிலை இடிக்கப்பட்ட இடத்தில், புதிதாக புத்தர் சிலையை தாய்லாந்து நிறுவியுள்ளது.

இதனால், கடும் ஆத்திரம் அடைந்துள்ள கம்போடிய அரசு, இது தங்கள் நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் செயல் என கண்டனம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் சூழலில், தாய்லாந்தின் இந்த அத்துமீறல், பதற்றத்தைத் தூண்டும் வகையில் இருக்கிறது எனவும் கம்போடியா குற்றம்சாட்டியுள்ளது.

விஷ்ணு சிலை அகற்றப்பட்டதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தன் ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## மெக்சிக்கோவில் கால்பந்து மைதானத்தில் துப்பாக்கிச்சூடு

- 11 பேர் உயிரிழப்பு
- 12 பேருக்கு படுகாயம்



(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவில் கால்பந்து மைதானத்தில் நேற்று நடந்த துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மெக்சிகோவின் மத்திய பகுதியில் குவானாஜீவாடோ மாகாணத்தில் உள்ள உள்ளூர் கால்பந்து மைதானத்தில் துப்பாக்கிச்சூடு நடந்தது. மர்மகும்பல் ஒன்று கால்பந்து வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனால் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது.


12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு அப்பகுதி மாகாண மேயர் சீசர் பிரிட்டோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் எதற்காக நிழ்ந்தது? தாக்குதல் நடத்தியவர்கள் யார்?

என்பது குறித்து இது வரை தகவல் வெளியாகவில்லை. தாக்குதல் நடத்திய கும்பலை பொலிஸார் தீவிரமாக தேடி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

தைப் பொருளாதாரம் அல்லாத நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளக்கூடாது என்ற உறுதிமொழிகள் இருப்பதையும் கார்னி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட சில சிக்கல்களைச் சரி செய்வதே சீனாவுடன் நாங்கள் செய்துள்ள ஒப்பந்தம் என கார்னி குறிப்பிட்டுள்ளார். (3)



## வானளவு உயர கோபுர உச்சியை அசால்டாக ஏறி முடித்த நபர்

## குவியும் பாராட்டுக்கள்

(தாய்பே)

தாய்வான் தலைநகரில் அமைந்துள்ள, 101 மாடி கட்டடத்தை, எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி ஏறி அலெக்ஸ் ஹோன்னோல்ட் புதிய சாதனை படைத்துள்ளார்.

508 மீற்றர் (1,667 அடி) உயரமும் 101 மாடிகளும் கொண்ட இந்தக் கட்டடத்தை, அலெக்ஸ் வெறும் 1 மணிநேரம் 31 நிமிடங்கள் 43 வினாடிகளில் ஏறி முடித்தார்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் உலகம் முழுவதும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

இந்தக் கட்டடம் ஒரு மூங்கில் மரம் போன்ற அமைப்பைக் கொண்டது.

இதில் 64 ஆவது மாடி வரை உள்ள 'Bamboo Boxes' எனப்படும் பகுதி மிகவும் சவாலானது.



அங்கு செங்குத்தான சரிவுகளில் வெறும் கைகளால் தொங்கியபடி அவர் ஏற வேண்டியிருந்தது.

கட்டடத்தின் உச்சியை அடைந்ததும் அவர் தனது கைக்ளை உயர்த்தி வெற்றியை அறிவித்தார்.

40 வயதான அலெக்ஸ் ஹோன்னோல்ட், எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி மலைகளில் ஏறும் முறையில் உலகப் புகழ் பெற்றவர்.



2017ஆம் ஆண்டு அமெரிக்காவின் யோசெமிட்டி தேசிய பூங்காவிலுள்ள 3,000 அடி உயரமான மலையை கயிறு இன்றி ஏறியவர்.

இவரது இந்தச் சாதனை 'Free Solo' என்ற பெயரில் ஆவணப் படமாக எடுக்கப்பட்டு, ஒஸ்கார் விருதையும் வென்றது குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமான நிலையத்தை சூழவுள்ள இடங்களில்

# பட்டம் விடுவதை தவிருங்கள்

## விமான நிலைய ஆணையகம்

(யாழ்ப்பாணம்) ------------------

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பட்டங்களை வானத்தில் பறக்க விடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு விமான நிலைய ஆணையகம் கேட்டுக் கொண்டுள்ளது.**

வானத்தில் பட்டங்களை பறக்க விடுவதனால், விமானங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் காணப் படுவதனால் விமான நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் பட்டம் விடுவதனைத் தவிர்த்துக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தல் தொடர்பான சுவரொட்டிகள் விமான நிலையத்தை சூழவுள்ள, காங்கேசன்துறை, மாவிட் டபுரம், வறுத்தலைவிளான், பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளதுடன், அது தொடர்பி லான அறிவுறுத்தல்கள் அப்பகுதியில் ஒலி பெருக்கிகள் மூலமும் அறிவிக் கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த விமானம் தரையிறங்க முற்பட்ட வேளை பட்டத்தினால், சிரமங்களை எதிர் கொண்டதாகவும், அதனால் பாரிய விபத்து ஏற்படவிருந்த நிலை யில் தெய்வாதீனமாக விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாக வும் தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985- இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>12இல்செவ்<br>கி-பா- 9<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc,MSc, Engineer (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor<br>தொ.இ: B/16489 | பிறப்பு-1989-இந்து<br>நட்சத்திரம்- அச்சுவினி<br>கி.பா -32 1/2<br>உயரம்-5"<br>தகைமை/தொழில்: BA,Home Maker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர் (வெளிநாடு)<br>தொ.இ: G/15574 |
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி-பா- 14 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்-A/L, Distribution<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16490 | பிறப்பு-1980-இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் - Degree<br>எதிர்பார்ப்பு: Only Australia, விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16415 |
| பிறப்பு:1978-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>8இல்செவ்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில் -O/L,Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16492 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்-ரேவதி<br>கி.பா -06<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSc,MSc , Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15463 |
| பிறப்பு: 1998- இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>3இல்சூரிசெவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BBA,Assistant Accountant<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: B/16493 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - Engineer Course (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15457 |
| பிறப்பு: 1966- இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: BEng, Engineer (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: Only London, விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16494 | பிறப்பு-1972-இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15561 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 529

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# சும்மா இருக்கிற சங்கை...!

“சும்மா இருக்கிற சங்கை ஊதி கெடுத்துவிட்டான்” சார்! என்று நாம் பல சந்தர்ப்பங்களிலே சொல்வது உண்டு.

அமைதியாக இருக்கின்ற ஒரு விடயத்திலே அநாவசியமாக தலையிட்டு விவகாரத்தை உண்டு செய்து விடுகிறார்கள் பாருங்கள். அவர்களுக்கு எல்லாம் இந்த உதாரணம் பொருந்தும்.

ஆனால் அந்தப் பழமொழி உண்டான விதம் எப்படி என்பதைப் பற்றி ஒரு பெரியவர் சொன்னார்.

மகாபாரதத்திலேயிருந்து சில சம்பவங்களைச் சொன்னார். கிருஷ்ணன் மீது எப்போதும் ஐந்து பொருட்கள் இருக்கும்.

அவை, சங்கு, சக்கரம், வில், வாள், கதை.

இந்த ஐந்தும் கிருஷ்ணனிடம் இருக்கும். பக்தியோடு கிருஷ்ணனைப் பார்க்கின்றவர்களுக்கு இதெல்லாம் ஆபரணங் களாகத் தெரியும்! எதிரிகளுக்கு இதெல்லாம் ஆயுதங்களாகத் தெரியும்!

சக்கரம், வில், வாள், கதை இதெல்லாம் ஆயுதங்கள் என்று சொன்னால் சரி ஏற்றுக்கொள்ளலாம்! சங்கு இருக்கே அது எப்படி ஆயுதமாகும்? இப்படித்தான் துரியோதனன் நினைத்தான்.

ஏமாந்து போனான். என்பது அந்தப் பெரியவருடைய கருத்து கண்ணனுடைய உதவி வேண்டும் என்பதற்காக அர்ஜூனனும் துவாரகைக்குப் போனான். துரியோதனனும் துவாரைகைக்குப் போனான். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறார் கிருஷ்ணன்.

“செருவில் நீ எமக்கு வெம் போர் செய் துணையாக வேண்டும்!” என்கிறார்கள்”.

“அதாவது வரப்போகும் போரிலே நீ எங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்!” என்று கேட்கிறார்கள். கிருஷ்ணன் சொல்கிறார்?

“தருமனுக்கு உதவி செய்வதாக முன்னாலேயே வாக்குக் கொடுத்து விட்டேனே!” என்கிறார். துரியோதனன் பார்க்கிறான் “சரி அப்படி என்றால் நீங்கள் ஆயுதங்களைக் கொண்டு. போர் செய்யக்கூடாது” என்று வேண்டிக் கொண்டான்.

கிருஷ்ணன் யோசித்தார். “சரி” என்று ஒத்துக் கொண்டார். துரியோதனனுக்கு இதைக் கேட்டதும் ரொம்ப மகிழ்ச்சி. அர்ஜூனன் கிருஷ்ணனிடம் கேட்கிறான்? “நீங்கள் எனக்கு சாரதியாக வேண்டும்!” என்று கேட்டுக் கொண்டான். “சரி” என்று மகிழ்ச்சியோடு ஒத்துக்கொண்டார்.

ஏனென்றால் தேர் ஓட்டுகின்ற சாரதிக்குத்தான் எஜமானுடைய வெற்றியை அறிவிப்பதற்காக அடிக்கடி சங்கை ஊதுகின்ற உரிமை உண்டு!

கிருஷ்ணனுடைய “பாஞ்சஜன்யம்” என்கிற சங்குக்கு எவ்வளவு பலம் உண்டு என்ற விடயம் துரியோதனனுக்குத் தெரியவில்லை! சண்டை நடக்கும் போதுதான் அதனுடைய சக்தி எப்பேற்பட்டது என்பதை அவன் புரிந்து கொண்டான்.

போர் நடக்கின்ற சமயத்திலே கிருஷ்ணன் சங்கு ஊதிய போதெல்லாம் ஆயிரக்கணக்கான கௌரவ வீரர்கள் எப்படி மடிந்தார்கள் என்பதை நேரிலே பார்த்தான் துரியோதனன்.

அதன்பின் தான் யோசித்தான்: “கிருஷ்ணனுடைய சங்கும் ஒரு ஆயுதமாகி விட்டதே! அவன் சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுக்கிறானே!” என்பதை உணர்ந்தான் துரியோதனன்.

இந்த அடிப்படையிலே உருவான பழமொழிதான் “சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான்” என்கிறது! அந்தப் பழமொழியைத் தான் நாம் இப்போது எப்படி எப்படியெல்லாமோ உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அது இருக்கட்டும். இப்போது நம் கதைக்கு வருவோம்.

ஒருவன் சொன்னான்.

“சார்... நான் நட்புக்காக எதையும் செய்வேன். நண்பனுக்கு ஒரு ஆபத்து என்றால் உடனடியாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து விடுவேன்.

நேற்று அப்படித்தான் நானும் என் நண்பனும் சினிமா பார்த்துவிட்டு வயல்வெளி வழியாக நடந்து வந்து கொண்டிருந் தோம். திடீர் என்று அவன் கால் தவறி ஒரு கிணத்திலே விழுந்து விட்டான். உடனே நான் என்ன செய்தேன் தெரியுமா? ஒரே ஓட்டமா ஓடிப்போய் பக்கத்து ஊரிலே உள்ள மணியை அழைத்துக்கொண்டு வந்து விட்டேன்!” என்றான்.

“ஏன்?” என்று கேட்டேன். அவன் தான் சார்... சவ ஊர்வலத்திலே சங்கு நல்லா ஊதுவான்!” என்கிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 16)
# இலங்கையில் வீட்டு கட்டுமானத்தில் மரம் (Timber)
# ஒரு பொறியியல் பார்வை




**8. நவீன சவால்கள்**

இன்றைய சூழலில் மரத்தை, நிலைத்த மற்றும் பாதுகாப்பான கட்டு மானப் பொருளாகப் பயன்படுத்துவதில் பல்வேறு தொழில்நுட்ப நிறுவன மற்றும் கொள்கை சார்ந்த சவால்கள் காணப்படுகின்றன.

**உள்ளூர் மர வளங்களின் சிதைவு மற்றும் மேலாண்மை குறைபாடு**

திட்டமிடப்படாத மர வெட்டுதல், பலவீனமான கண்காணிப்பு நடைமுறைகள் மற்றும் ஒருங்கிணைந்த தேசிய கொள்கை இல்லாமை காரணமாக, உள்ளூர் மர வளங்கள் கணிசமாக சிதைவடைந்துள்ளன. மர உற்பத்தி, பயன்பாடு, மறு பயன்பாடு மற்றும் மறுசுழற்சி ஆகிய அனைத்தையும் ஒரே கட்டமைப்பில் நிர்வகிக்கும் தெளிவான கொள்கை தற்போது இல்லை.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு குறைவு**

கான்கிரீட் மற்றும் எஃகு பொருட்களுடன் ஒப்பிடுகையில், மரம் தொடர்பான உள்ளூர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் மிகவும் குறைவாக உள்ளன. இலங்கையின் காலநிலை, ஈரப்பதம் மற்றும் உயிரியல் தாக்கங்களுக்கு ஏற்ப மரத்தின் செயல்திறன் குறித்த தரவுகள் போதியளவில் உருவாக்கப்படவில்லை.

**கரையான் மற்றும் அழுகல் தொடர்பான சிக்கல்கள்**

மர கட்டுமானம் குறித்து பொதுமக்களிடையே காணப்படும் முக்கிய அச்சம் கரையான் தாக்கம் மற்றும் அழுகல் ஆகும். ஆனால் பெரும்பாலான தோல்விகள் மரத்தின் இயல்பினால் அல்ல முறையான உலர்த்தல், பாதுகாப்பு சிகிச்சை மற்றும் வடிவமைப்பு விவரங்கள் இல்லாமையாலேயே ஏற்படுகின்றன.

**போதிய உலர்த்தல் (Seasoning) இல்லாமை**

முன்னைய காலங்களில் நீண்ட காலம் இயற்கையாக உலர்த்தப்பட்ட மரம் பயன்படுத்தப்பட்டது. இன்று காலஅழுத்தம் காரணமாக, முறையாக உலர்த்தப்படாத மரம் பயன்படுத்தப்படுவதால் வளைவு, பிளவு மற்றும் நீடித்த தன்மை குறைவு போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன.

**தீ பாதுகாப்பு குறித்த தவறான கருத்து**

மரம் தீயில் பாதுகாப்பற்றது என்ற பொதுவான எண்ணம் நிலவுகிறது. உண்மையில், மரத்தின் கருகும் நடத்தை (charring behaviour) கணிக்கக் கூடியதாக இருப்பதால், சரியான பொறியியல் வடிவமைப்புடன் போதிய தீ எதிர்ப்பு பெற முடியும்.

**தென்னை மரத்தின் தவறான பயன்பாடு**

தேங்காய் மரத்தின் அடர்த்தி அதன் குறுக்கு வெட்டில் மாறுபடும் தன்மை கொண்டது. இதனை சரியாக புரிந்து கொள்ளாமல், முதன்மை சுமையைத் தாங்கும் உறுப்புகளில் பயன்படுத்துவது செயல்திறன் குறைபாடுகளுக்கு வழிவகுத் துள்ளது.

**தற்காலிகப் பணிகளில் பொறியியல் இல்லாத நடைமுறைகள்**

Formwork, falsework, scaffolding போன்ற தற்காலிக கட்டமைப்புகள் பெரும்பாலும் அனுபவம் அல்லது தனிப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. பொறியியல் கணக்கீடுகள் மற்றும் தகுதியான மேற்பார்வை இல்லாமை பாதுகாப்பு அபாயங்களையும் பெர்ருள் வீணாக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

**தேசிய மர வடிவமைப்பு குறியீடு மற்றும் நிறுவனத்திறன் குறைவு**

இலங்கையில் முழுமையான, பரவலாக பயன்படுத்தப்படும் மர வடிவமைப்பு குறியீடு இல்லை. மேலும், அரசுத் துறைகளில் மரப் பொறியியல் தொடர்பான சிறப்பு அறிவும் திறனும் போதியளவில் வளர்க்கப்படவில்லை.

**9. முன்மொழிவுகள் மற்றும் எதிர்கால பாதை**

மேலே குறிப்பிடப்பட்ட சவால்களை எதிர்கொள்ள, மரத்தை ஒரு நவீன பொறியியல் கட்டுமானப் பொருளாக மீள நிறுவுவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியம்.

**ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் வள மேலாண்மை**

இலங்கையில் சில கொள்கைகள் ஏற்கனவே உள்ளன. ஆனால் முக்கிய சவால் அவற்றை சரியாக நடைமுறைப்படுத்தல், சம்பந்தப்பட்டவர்களின் புரிதல் மற்றும் அறிவு மட்டம் ஆகியவற்றில் உள்ளது.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை வலுப்படுத்தல்**

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை அமைப்புகள் இணைந்து, மரத்தின் இயந் திர பண்புகள், நீடித்த தன்மை, தீ எதிர்ப்பு மற்றும் பொறியியல் மரப்பொருட்கள் குறித்த உள்ளூர் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**தரநிலை நிர்ணயம் மற்றும் வகைப்பாடு**

மரத்திற்கு வலிமை, நீடித்த தன்மை மற்றும் உலர்த்தல் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் அதிகாரபூர்வ தரநிலைகள் மற்றும் வகைப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இது தவறான பயன்பாட்டையும் தேவையற்ற அதிகப்படியான பயன்பாட்டையும் குறைக்கும்.

**தற்காலிக கட்டமைப்புகளுக்கான தொழில்முறை வடிவமைப்பு**

தற்காலிகப் பணிகளும் பொறியியல் கட்டமைப்புகளாகவே கருதப்பட வேண்டும். அவற்றின் வடிவமைப்பு, சரிபார்ப்பு மற்றும் மேற்பார்வை தகுதியான பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பொறியியல் மரப் பொருட்களின் ஊக்குவிப்பு**

Glue-laminated timber, laminated panels போன்ற பொறியியல் மரப் பொருட்கள் இயற்கை மரத்தின் வரம்புகளை மீறி ஒரே மாதிரியான தரம் மற்றும் செயல்திறனை வழங்குகின்றன. இவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**சட்ட வழிகாட்டுதலுடன் அறிவு அடிப்படையிலான பயன்பாடு**

மரம் நிலைத்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமெனில், ஒவ்வொரு கட்டுமான நிறுவனமும் குறைந்தபட்ச தொழில்நுட்ப அறிவு மற்றும் தகுதியான பொறியியல் ஆதரவு பெற்றிருக்க வேண்டும். இதனை சட்ட வழிகாட்டுதல்கள் மூலம் உறுதி செய்யலாம்.

**மரம் மற்றும் பிளைவுட் மறு பயன்பாடு மற்றும் மறுசுழற்சி**

பயன்படுத்தப்பட்ட மரம் மற்றும் இறக்குமதி பிளைவுட் தாள்கள் திட்டமிட்ட முறையில் மறுபயன்பாடு மற்றும் மறு சுழற்சிக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இது கழிவு குறைப்பையும் இறக்குமதி சார்பை குறைப்பதையும் ஏற்படுத்தும்.

**10. முடிவு**

மரம் சரியான பொறியியல் அறிவு, தரநிலைகள், தொழில்முறை மேம்பாடு மற்றும் சட்ட மற்றும் கொள்கை ஆதரவுடன் பயன்படுத்தப்பட்டால், அது பாதுகாப்பானதும், பொருளாதார ரீதியாகச் சாத்தியமானதும், சுற்றுச்சூழலுக்கு உகந்துமான கட்டுமானப் பொருளாக அமையும். கடந்த கால அனுபவங்களையும் தற்போதைய சவால்களையும் கருத்தில் கொண்டு, மரத்தை பாரம்பரியப் பொருளாக மட்டுமல்லாது, நவீன பொறியியல் கட்டமைப்பு, வடிவமைப்பு மற்றும் செயல்திறன் கோட்பாடுகளின் அடிப்படையில் மீள அணுக வேண்டிய காலம் இது.

அரசு, தொழில்முறை அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் கட்டுமானத் துறை இணைந்து செயல்பட்டு, மரம் தொடர்பான தொழில்முறை அறிவு, பொறியியல் வடிவமைப்பு திறன், சட்ட, கொள்கை கட்டமைப்பு மற்றும் தரநிலை மேம்பாட்டை உறுதி செய்தால், இலங்கையின் எதிர்கால வீட்டு கட்டுமானத்தில் மரம் மீண்டும் ஒரு முக்கிய, பொறுப்பான மற்றும் நிலைத்த பங்கு வகிக்க முடியும்.

பொது விழிப்புணர்வு மற்றும் கொள்கை விவாதத்திற்காக தயாரிக்கப்பட்ட பொறியியல் கட்டுரை.

(தொடரும்)

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

27.01.2026
தை 13 , செவ்வாய்க்கிழமை
நவமி பிற்பகல் 5.07 மணிவரை

பரணி முற்பகல் 9.29 மணிவரை
சுப நேரம் 11.06-12.36 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்:
சித்திரை.

**வளவன்**

**மேஷம்**
வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள்.

**கடகம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**
தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**மகரம்**
விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**
ஊர் மாற்றம், இட மாற்றம் என்பன இடம்பெறலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்**
மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முடிவுகள் கைகூடும், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்**
எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பண வரவு திருப்தி தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கும்பம்**
பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, சுதந்திரமாகச் செயற்படுவீர்கள்.

**மிதுனம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி**
உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கட்டிடப் பணியில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மீனம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**நீ புகழை வெறுத்தால் புகழ் உன்னைத் தேடி வரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 965





சரியான யோசனை, ஐயா! அவன் இல்லாத போது எனக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் உதவிக்கு நீ இருக்கவே இருக்கிறாய்

"இளவரசே! யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்களுக்குத் தீங்கு செய்யத் துணிவுள்ளவன் இந்த உலகில் இருப்பதாக நான் கருதவில்லை. தாங்கள் இல்லாத போது தங்களைப் பற்றி ஏதேதோ பேசிய வீரக் கிழவர்கள் தங்களை நேரில் பார்த்ததும் கைகால் நடுங்கி வாய் குழறித் தடுமாறுவதை நேரில் பார்த்தேனே?"

"தம்பி! கையில் கத்தி எடுத்துப் போராடக் கூடிய எந்த ஆண் மகனுக்கும் நான் பயப்படவில்லை. பின்னாலிருந்து முதுகில் அம்பு விடக்கூடிய கந்தமாறன் போன்றவர்களுக்கும் நான் பயப்படவில்லை" "மறுபடி கந்தமாறனைப் பற்றி அப்படிச் சொல் கிறீர்களே.."

"கேள், தம்பி! ஒரு பெண்ணின் நெஞ்சின் ஆழத்தில் உள்ள வஞ்சகத்துக்குத்தான் அஞ்சுகிறேன். அவள் மனத்தில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று எண்ணும்போதெல்லாம் என் உள்ளம் பதைபதைக்கிறது. அவள் என்னை மர்மமாகப் பார்க்கும் ஒவ்வொரு பார்வையும் என் நெஞ்சில் ஈட்டியைச் செலுத்துவது போலிருக்கிறது. அதைப் பற்றி எண்ணிய உடனே என் கை கால்கள் வெடவெடத்துப் போகின்றன."

"ஐயா! நந்தினிதேவியின் வஞ்சகத்துக்குப் பயப்பட வேண்டியதுதான் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அவருடைய உள்ளத்தில் எவ்வளவு பயங்கரமான துவேஷம் குடிகொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். என்னை அவர் உயிரோடு போகவிட்டதை நினைக்கும்போது சில சமயம் அதில் என்ன சூழ்ச்சி இருக்குமோ என்று பீதி கொள்கிறேன். ஆனால் இதெல்லாம் அவருக்கு உண்மை தெரியாமலிருக்கும் காரணத்தினால்தான் அல்லவா? அவருடைய சகோதரர் தாங்கள் என்பதைத் தெரிவித்து விட்டால் அதற்குப் பிறகு எந்தக் கவலையும் வேண்டியதில்லையல்லவா?

"அப்படியா எண்ணுகிறாய்? வல்லவரையா! நீ கெட்டிக்காரன்தான். ஆனால் பெண்களின் இயல்பு அறியாத அப்பாவிப் பிள்ளை. நந்தினிக்குத் தான் சுந்தர சோழரின் குமாரி என்பது தெரிந்தால், எங்கள் எல்லோரிடமும் அவளுடைய குரோதம் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகும். தஞ்சை சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக அவளுக்குப் பட்டம் சூட்டுவதாகச் சொன்ன போதிலும் அவளுடைய கோபம் தீராது."

"இளவரசே! அப்படித் தாங்கள் கருதினால் அந்தப் பொறுப்பை என்னிடமே ஒப்புவியுங்கள். நானே நந்தினியிடம் உண்மை வரலாற்றைச் சொல்வேன். அவருடைய கோபத்தையும் தணிக்க முயல்வேன்." "உன்னாலும் அது முடி யாது, நண்பா! நந்தினியின் கோபத்தை யாராலும் தடுக்க முடியாது. நான் சொல்வதை கேள்! எங்கள் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், ஒன்று நான் சாக வேண்டும் அல்லது அவள் சாக வேண்டும் அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும்.

வீர பாண்டியனைக் கொன்ற வாளினால் அவளையும் கொன்றுவிடுகிறேன்." "இளவரசே! இது என்ன பயங்கரமான பேச்சு?".

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உழைப்பே பிழைப்பு



ஒரு சின்னக் குடும்பம். தந்தை, தாய், மகன் ஆகிய மூவர் மட்டுமே அதில் இருந்தனர். மகன் இளைஞனாக இருந்தும் பொறுப்பில்லாமல, சோம்பேறியாய் இருப்பதைக்கண்டு தந்தை வருந்தினார்.

"எப்படியும் மகனைத் திருத்த வேண்டும், உழைப்பின் அருமையை அவனுக்கு உணர்த்த வேண்டும்" என்று நினைத்தார் அவர்.

ஒரு நாள் அவனை அழைத்து நீயாக உழைத்து இரண்டு ரூபாயாவது ஈட்டி வந்தால் தான் இனி இந்த வீட்டில் சாப்பிடலாம். இல்லாவிட்டால் நீ பட்டினி கிடக்க வேண்டும். என்னிடம் அன்பையோ இரக்கத்தையோ எதிர்பார்க்காதே என்று கண்டிப்பாகச் சொன்னார் அவர்.

வேறு வழியில்லாத மகன் அன்று மாலை தன் நண்பன் ஒருவனிடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வீடு வந்தான். தந்தையிடம் அதைத் தந்து இரண்டு இது நானே உழைத்த பணம் என்றான்.

அவன் தந்தை அந்த ரூபாய்த் தாளை இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு இது நீ சம்பாதித்த பணம் அல்ல, என்னை ஏமாற்ற முயற்சிக்காதே என்று சொல்லிவிட்டு, பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த அடுப்பில் அந்த ரூபாயை எறிந்தார்.

அது எரிந்து சாம்பலானது. மறுநாளும் உழைக்க விரும்பாமல் தன் மாமாவிடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கித் திரும்பினான் அவன். அதையும் அவன் தந்தை வழக்கம் போல அடுப்பில் தூக்கி எறிந்தார்.

அடுத்த நாள் அத்தையிடம் இருந்து வாங்கிய பணத்திற்கும் அதே கதி தான் நேர்ந்தது.

நான்காம் நாள் வேறு வழி காணாத அவன் கடுமையாக உழைத்தான். கிடைத்த இரண்டு ரூபாயுடன் மகிழ்ச்சியாக வீடு திரும்பிய அவன் "இது உண்மையில் நானே முயன்று சம்பாதித்தது" என்று சொல்லி தந்தையிடம் தந்தான்.

ஆனால் அவரோ வழக்கம் போல "இதுவும் நீ ஈட்டிய பணம் அல்ல என்னை ஏமாற்ற முயற்சிக்காதே" என்று சொல்லி அந்தப் பணத்தை வழக்கம் போல அடுப்பில் போட்டார்.

அவ்வளவு தான் மகன் ஒரே பாய்ச் சலாக அடுப்பின் அருகில் சென்று அந்தப் பணத்தில் தீப் பிடிப்பதற்குள் கையைச் சுட்டுக் கொண்டு அதை எடுத்தான்.

மகனைக் கட்டித் தழுவிக் கொண்டார். தந்தை "மகனே ! இது நீ உழைத்து சம்பாதித்த பணம்தான்.

அதனால் தான் நான் வழக்கமாக அடுப்பில் தூக்கிப் போடும் பணத்தைப் பற்றி கவலைப்படாத நீ, இம் முறை மட்டும் பாய்ந்து சென்று அடுப்பில் விழுந்த பணம் எரிந்து விடாது காப்பாற்றினாய்.

உனக்கு இப்போது தான் உழைப்பின் அருமையும் பணத்தின் பெருமையும் தெரிந்து உள்ளது. இனி எனக்கு உன்னைப் பற்றி கவலை இல்லை" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் தெளிவுடன் அமைதியில் நிலைத்திருக்கும் போதே சூழ்நிலைகளின் ஆழ்ந்த அர்த்தங்களை உணர முடியும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பதவிக்காகத் தேர்தலா? உரிமைக்காகத் தேர்தலா?

எல்லை நிர்ணயம் தொடர்பில் புதியதொரு குழு நியமிக்கப்படுமாயின், மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத ஆபத்து ஏற்படுமென எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளரும் ஓய்வுபெற்ற தேர்தல் ஆணையாளருமான சமன் ஸ்ரீ ரத்நாயக்க எச்சரிக்கை செய்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தரப்புகளின் நிலைப்பாடு என்ன? என்று ஆராய்வதும் இங்கு அவசியமாகிறது.

குறித்த ஆய்வு பற்றிப் பிரஸ்தாபிக்கும் போதுதான், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த கோரிக்கையின்பால் கவனம் செலுத்தப்படுகிறது.

அதாவது, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் எனத் தமிழ்த் தரப்புகள் முன்வைத்த கோரிக்கை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

அதேநேரம் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற மேற்போந்த கோரிக்கைக்குள் இருக்கக்கூடிய நோக்கம் யாது? என அறிவதிலேயே எல்லாம் தங்கியுள்ளது.

ஆம், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதன் மூலம் அதிகாரப் பகிர்வுகள் தமிழ் மக்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்பு உருவாகும்.

அவ்வாறு மாகாண சபை அரசு அமையப் பெற்றால், எங்கள் தமிழ் மக்கள் சார்ந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது சுலபமாக அமையும் என்பன உள்ளிட்டவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தால், மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்கள் உறுதி செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

மாறாக, பதவிகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகளின் நோக்கமாக இருக்குமாயின், மாகாண சபைத் தேர்தலால் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாது.

அதேநேரம் பதவிக்காக மட்டுமே மாகாண சபைத் தேர்தலைத் தமிழ்த் தரப்புகள் அவசரப்படுத்துவதாக இருந்தால் அதன் விளைவாக, மாகாண சபை முறைமை எமக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் வரநேரிடும்.

ஆக, இப்போது நம் மத்தியில் இருக்கக் கூடிய தமிழ்த் தரப்புகளிடம் ~ தமிழ் அரசியல் கட்சிகளிடம் நேர்சீரான கொள்கையும் கோட்பாடும் இல்லை. அதைவிட மிகமோசமான நிலைமை உட்கட்சிகளுக்குள் நடைபெறுகின்ற கழுத்தறுப்புகளாகும்.

இதனைப் பார்க்கும்போது தமிழ் அரசியல் கட்சிகள் தங்களைத் தாங்களே அழிக்கச் சபதம் எடுத்துள்ளன என்பது தெட்டத் தெளிவாகிறது.

இந்த இலட்சணத்தில் மாகாண சபைத் தேர்தலும் நடந்தால், உள்ளக வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏற, நாட்டின் ஆளுந் தரப்பு இலாவகமாக வடக்கையும் கிழக்கையும் தனதாக்கிக் கொள்ளும்.

## திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் காண்டாமணி பிரதிஸ்டை செய்ய அனுமதி மறுப்பு

### ஜனாதிபதி, பிரதமர் தலையிடக் கோரிக்கை

(திருமலை)

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு மிகப் பிரம்மாண்டமான காண்டாமணியைப் பிரதிஸ்டை செய்ய, தொல்லியல் திணைக்களத்திடம் அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் கலா நிதி சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா அவர்களினாலேயே மேற்குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் சுமார் 1000 கிலோ கிராம் நிறையுடைய காண்டாமணி பிரதிஸ்டை செய்ய ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு தொல்லியல் திணைக்களம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஆலய நிர்வாகத்தினர் அவரிடம் முறையிட்டிருந்தனர். ஆயினும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் அவர் எடுத்திருக்கவில்லை.

இந்நிலையில் குறித்த பிரமாண்ட காண்டாமணியை பிரதிஸ்டை செய்ய ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலையிட்டு சுமுகமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா கோரிக்கைவிடுத்துள்ளார். (க-8)

## ஆசனப்பட்டி அணிவது கட்டாயம்; மீறினால் அபராதம்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய வீதிகளில் ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

ஆசனப்பட்டி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த 3 மாத கால அவகாசம் கடந்த டிசம்பர் 24 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது என வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி வாகன சாரதி மற்றும் பயணிக்கும் அனைவரும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாகன சாரதி மற்றும் முன் இருக்கையில் அமர்ந்து செல்லும் பயணி ஆகிய இருவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் இந்த விதிமுறையை கண்டிப்பாக நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (8)

## இளைஞன் மீது தாக்குதல் 8 சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதிக்குத் தொழிலுக்கு சென்றிருந்த போது, ஹற்றன் - நோர்வூட் வெஞ்சர் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸாரால் குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (8)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், மணவாளக் கோல விழாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் மற்றும் விசேட தீபாராதனையும் மாலை 5 மணிக்கு பூசை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, சுவாமி அலங்காரத்துடன் திருவீதி வலம் வருதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

## வட பத்திரகாளி அம்பாளிற்கு மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு அருள்மிகு வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக பெருவிழா நாளை (28) ஆம் திகதி புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் ஆலயக் கும்பாபிஷேக கிரியைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் விநாயகர் வழிபாடு மற்றும் கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகின.

இன்று காலை 6.00 மணி முதல் கோதூளி முகூர்த்தத்தில் எண்ணெய்க்காப்பு சாற்றல் இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் யாக பூசைகள் ஆரம்பமாகி மகா பூர்ணாகுதி சமர்ப்பணத்தை தொடர்ந்து தசமித் திதியும், அமிர்தசித்த யோகமும், ரோகிணி நட்சத்திரமும் அமையவுறும் முற்பகல் 9.30 மணி முதல் 11.00 மணி வரை உள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

அதிசுந்தர திரிதள இராஜகோபுர கும்பாபிஷேகம் ஏனைய தூபிகள் கும்பாபிஷேகம் மற்றும் அரிய சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் காளிகாதேவி அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகமும் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

மாலை வசந்த மண்டப பூஜை, தொடர்ந்து எம்பெருமாட்டி திருவீதி உலாவரும் வைபவம் நடைபெறவுள்ளது. (ம-7)

## போதை மாத்திரை விற்பனை இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

நாவலப்பிட்டி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து அதிக விலைக்கு மதன மோதக போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த இளைஞர் ஒருவர் நாவலப்பிட்டி பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞனே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் உணவகம் ஒன்றை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து 30 மதன மோதக போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 07

என். சொக்கன்

இதற்கெல்லாம் சாட்சி வேண்டுமில்லையா? சிஐஏயும் ஃபிலிப்பைன்ஸ் இராணுவமும் சில வன்முறை/தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அரங்கேற்றிவிட்டு, அவற்றையெல்லாம் கம்யூனிஸ்ட்களின் வேலை என்று பிரசாரம் செய்தார்கள்.

இந்தமுறை, பிரசாரங்களைத் தவிர, அவர்களுக்கு வேறு சில முக்கியமான வேலைகளும் இருந்தன. உள்ளூர் இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள், இதர உபகரணங்களை வரவழைத்து, அவற்றில் வேண்டிய பயிற்சிகளையும் கொடுத்தார்கள். இதன் மூலம் உள்நாட்டுக், கலவரங்களைச் சமாளிப்பதற்கு ஃபிலிப்பைன்ஸ் இராணுவம் தயாரானது.

அதன்பிறகு, ஃபிலிப்பைன்ஸில் பொதுத் தேர்தல் வந்தது (1953). இதிலும், அமெரிக்காவுக்கு ஆதரவான ஆட்சி அமைவதற்காகக் களத்தில் இறங்கியது சிஐஏ. கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பிரசாரங்கள் முழுவேகத்தில் முடக்கிவிடப்பட்டன. எதிரிகளின்மீது குற்றச்சாட்டுக்கள், ஆதாரங்கள் அள்ளி வீசப்பட்டன. கடைசியில், அமெரிக்கா விரும்பிய ஆட்சிதான் அமைந்தது.

இதே ஆண்டு, ஈரானிலும் ஓர் அரசியல் மாற்றம் நிகழ்ந்தது. அதன் பின்னணியில் இருந்து இயங்கியதும் சிஐஏ தான்.

அங்கே மொஹம்மத் மொசாதே என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி அமைத்திருந்தார். அதன்பிறகு அவர் கொண்டுவந்த சில சீர்திருத்தங்கள் மேற்கத்தேய நாடுகளுக்குப் பிடிக்கவில்லை.

இந்த ஆட்சி நீடிப்பது நமக்கு நல்லதில்லை என்று முடிவு செய்து, முதலில் பிரிட்டன் களத்தில் குதித்தது. அதன்பிறகு, சிஐஏயையும் துணைக்குச் சேர்த்துக்கொண்டார்கள்."

மொசாதேவைப் பதவியிறக்க வேண்டும் என்பது முதல் நோக்கம். அதன்பிறகு, நமக்குத் தலையாட்டக்கூடிய ஒரு நல்ல ஆட்சியாளரைத் தேடிப் பிடித்து உட்கார வைக்கவேண்டும். இதற்காக, பல ரகசிய நடவடிக்கைகள் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன.

முக்கியமாக, அப்போதைய ஆட்சியை விரும்பாத, மொசாதே அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக் கருத்து கொண்டவர்களைத் தேடிப் பிடித்தது சிஐஏ. கொடி பிடிக்கலாமா, தெருவில் இறங்கி கோஷம் போடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம், "நாங்கள் உங்களுக்கு உதவியாக வருகிறோம்" என்று நம்பிக்கை கொடுத்து, ஆயுதம் ஏந்தவைத்தார்கள்.

இதைத் தொடர்ந்து, ஏராளமான புரட்சி இளைஞர்களுக்குப் பண உதவியும் ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவர்கள் ஈரானியப் பொது மக்களிடையே மொசாதேவுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பினார்கள், மொசாதே ஆதரவாளர்களுடன்



தெருவில் இறங்கிச் சண்டை போட்டார்கள்.

இதன்மூலம், சிஐஏ எதிர்பார்த்த மக்கள் புரட்சி தொடங்கிவிட்டது. பிரிட்டனும் அமெரிக்காவும் இதனை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, குழம்பிய குட்டையில் மீன் பிடித்தார்கள். மேலும் பல கிளர்ச்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்து, பிரச்சினையைப் பெரிதாக்கினார்கள்.

1953 ஆகஸ்ட் மாதத்தில், எதிர்ப்பாளர்களின் கை ஓங்கியது. பிரதமர் மொஹம்மத் மொசாதே கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அமெரிக்கா மற்றும் சிஐஏ விரும்பிய ஆட்சி ஈரானில் அமைந்தது.

அடுத்த வருடம், க்வாடமாலாவிலும் இதேதான் நடந்தது. கம்யூனிஸ ஆதரவு அரசு, அல்லது, அமெரிக்காவால் அப்படி நம்பப்பட்ட ஓர் அரசு, சிஐஏயின் தீவிர நடவடிக்கைகளால் கவிழ்க்கப்பட்டது.

இந்தமுறை சிஐஏயால் பதவி இறக்கப்பட்டவர், அர்பென்ஜ் குஜ்மன் (Jacobo Arbenz Guzman). க்வாடமாலா மக்கள் ஆதரவுடன் 1951 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த இவர், அந்நாட்டில் பல புதிய சீர்திருத்தங்களை அமுல்படுத்திக் கொண்டிருந்தார்.

அர்பென்ஜ் குஜ்மனின் இந்த நடவடிக்கைகள், அவரை ஒரு கம்யூனிஸ்டாக அடையாளம் காட்டின. இதைக் கவனித்த அமெரிக்கா, உஷாராகிவிட்டது.

ஐரோப்பாவில்மட்டுமின்றி, அமெரிக்காவிலும் கம்யூனிஸம் பரவத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. இந்த விபரீதத்தை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என்பதற்காக, நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது அமெரிக்கா.

அப்போது அவர்களுக்கு யாரைப் பார்த்தாலும் கம்யூனிஸ்டாகத் தெரிந்தார்கள். அரசியல்வாதிகள், அதிகாரிகளில் தொடங்கி, எழுத்தாளர்கள், ஓவியர்கள், சினிமாக் கலைஞர்கள் வரை கம்யூனிஸத்துக்கு ஆதரவாகச் செயற்படுகிறவர்களாகக் கருதப்படுகிறவர்களைக் கண்டறிந்து ஒதுக்கி வைத்தது அமெரிக்கா. ஹாலிவுட் நகைச்சுவைப் பிரபலம் சார்லி சாப்ளின் கூட, இப்படிக் குற்றம் சாட்டப்பட்டு அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்தான்.

சார்லி சாப்ளின்மீது சந்தேகப்பட்டவர்களுக்கு, அர்பென்ஜ் குஜ்மன் கம்யூனிஸ்டாகத் தெரிந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. சோவியத் யூனியன் ஆதரவுடன் அவர் செயற்படுகிறார் என்று ஊகித்த அமெரிக்கா, அவரைப் பதவியிறக்கியாக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டது.

எங்கோ இத்தாலியிலும் ஈரானிலும் கம்யூனிஸம் வளர்ந்துவிடக் கூடாது என்று மினக்கெடுகிற அமெரிக்காவுக்கு, தங்கள் மூக்குக்குக் கீழே இருக்கும் க்வாடமாலாவில் கம்யூனிஸ்ட் ஆதரவு ஆட்சி அமைவது பிடிக்கவில்லை. சோவியத் யூனியனுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு அர்பென்ஜ் என்னவெல்லாம் செய்வாரோ என்கிற பயம் அவர்களை முரட்டுத் தனமாகச் செயற் படவைத்தது. தவிர, அர்பென்ஜ் ஆட்சியால் பாதிக்கப்பட்ட சில அமெரிக்க நிறுவனங்களும், அவரைக் கீழே இறக்குவதற்கு முயன்றார்கள். அவர்களுடைய வற்புறுத்தலைத் தொடர்ந்து, அமெரிக்கா தலையிடுவது இதில் கட்டாயமாகிவிட்டது.

இதில்அர்பென்ஜ் குஜ்மன் ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டத்துக்கு சிஐஏ சூட்டிய பெயர், "PBSUCCESS". சில மாதங்களுக்குமுன் ஈரானில் வெற்றி பெற்ற அதேஃபார்முலாதான்- அரசாங்கத்துக்கு எதிரான போராளிகளைக் கண்டுபிடி, ஆதரவு கொடு, எதிர்ப் பிரசாரம், தாக்குதல், கலாட்டாக்கள், குழப்பங்கள், புரட்சிகள், புதிய அரசாங்கம்!

இந்தமுறையும், சிஐஏயின் திட்டம் கச்சிதமாக வேலை செய்தது. அர்பென்ஜ் ஆட்சியைப் பிடிக்காத சில உள்ளூர் இயக்கங்களைத் தேடிப் பிடித்தார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, "சும்மா புகுந்து விளையாடுங்கள்" என்று ஆசிர்வதித்து அனுப்பிவைத்தார்கள்.

இன்னொருபக்கம், அமெரிக்கா க்வாடமாலாவுக்கு அரசியல், பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை உருவாக்கிக்கொண்டிருந்தது. கம்யூனிஸம்பற்றிய எதிர்ப் பிரசாரங்களும் முழுவேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இப்படி சிஐஏ எல்லா திசைகளில் இருந்தும் அடித்ததில், க்வாடமாலாவின் சிறிய அரசாங்கத்தால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை.

சில நூறு உள்ளூர் புரட்சியாளர்களை வைத்துக் கொண்டு சிஐஏ நினைத்ததைச் சாதித்து விட்டது - அர்பென்ஜ் குஜ்மன் தன் பதவியை ராஜினாமா செய்யவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனைக்...

தப்படவுள்ளதாக அந்த மருத்துவ மனையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் குமார தந்த நாராயண தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வசதிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் செயற்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையைப் பெற முடியாத தம்பதிகளுக்கு பொதுச் சுகாதாரத் துறையினூடாக ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

IVF என்பது ஒரு பெண்ணின் கருமுட்டையை உடலுக்கு வெளியே ஒரு ஆய்வகத்தில் விந்தணுவுடன் கருத்தரிக்கச் செய்து பின்னர் அந்த கருவை மீண்டும் பெண்ணின் கருப்பைக்குள் மாற்றும் ஒரு மருத்துவ முறையாகும். (ம-7)

## வடக்கு, கிழக்கு...

சென்ற மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அங்குள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள், பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சென்று போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் குறித்த கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளனர்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத் தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும் தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறித்த போராட்டம் நடைபெறவுள்ளது. (ம-7)

## துன்னலை வீதி...

பாலம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதால் துன்னாலை வீதியின் ஒரு பகுதி தற்காலிகமாக மூடப்படுகின்றது.

தொண்டைமானாறு வல்லை துன்னாலை வீதியில் (B417) உள்ள பாலம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதால் யாக்கரைச் சந்திக்கும் (தொண்டைமானாறு வல்லை துன்னாலை வீதி மற்றும் சாவகச்சேரி புலோலி வீதி) முள்ளி சந்திக்கும் (தொண்டைமானாறு வல்லை துன்னாலை வீதி மற்றும் புலோலி கொடிகாமம் கச்சாய் வீதி) இடையேயான வீதிப் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்புனரமைப்புப் பணிகள் 3 மாதங்கள் நடைபெறவுள்ளதால் மாற்றுப் பாதையான சாவகச்சேரி புலோலி வீதி மற்றும் அல்வாய் நெல்லியடி துன்னாலை வீதி என்பவற்றைப் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். (ம-7)

## குற்றவாளி...

வதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.வுட்லர் தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தைப் புறக்கணித்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான விசேட நடவடிக்கை பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 2026ஆம் ஆண்டிலும் இத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் கடந்த 2024ஆம் ஆண்டில் 10 சந்தேகநபர்களையும் 2025ஆம் ஆண்டில் 11 சந்தேகநபர்களையும் வெளிநாடுகளில் இருந்து எம்மால் நாட்டுக்கு அழைத்து வர முடிந்தது.

அதற்கமைய இந்த வருடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மற்றுமொரு சந்தேகநபர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார். இந்தச் சந்தேகநபரை கைது செய்வதற்கு இலங்கைப் பொலிஸாருக்கு வழங்கிய ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் வழிகாட்டல்களுக்காக இந்திய அரசுக்கும் இந்திய தூதரகத்திற்கும் இந்திய பொலிஸ் அதிகாரிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட சந்தேகநபர் தற்போது வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் 3 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றார். (ம-7)

## காணாமல்...

பட்டவராவார்.

நேற்று முன்தினம் (25) இரவு சுமார் 7.30 மணியளவில், குறித்த இளைஞனின் வீட்டிற்கு வந்த நபர் ஒருவர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் குறித்த இளைஞனை ஏற்றிச் சென்றதாகவும், அதன் பின்னர் அவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரது தயாரினால் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வீட்டிற்கு அருகாமையில் உள்ள விடியல் விளையாட்டு மைதானத்தில் உள்ள கிணற்றுகட்டில் குறித்த இளைஞனின் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதுடன் கிணற்றுக்குள் குறித்த இளைஞருடையதாக கருதப்படும் காலணி ஒன்று காணப்பட்டது.

அதனையடுத்து குறித்த கிணற்று நீரினை வெளியேற்றி தேடுதல் மேற்கொண்டபோது குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## கப் ரக வாகனம்...

ஆதிமூலம் சிவகுமார் (வயது-55) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 23ஆம் திகதி சுண்டிக்குளம் சந்திப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த கப் ரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,316)


மஹஜன சம்பத
திகதி 2026.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 6086
U 6 7 6 6 3 3
அத சம்பத
U 6 6 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 661

சுப தவசக்
திகதி 2026.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 292
சிம்மம் 03 17 37
5673

தன நிதானய
திகதி - 2026.01.26
சீட்டிழுப்பு இலக்கம் - 2116
J 19 43 44 73 J

மெகா பவர்
திகதி 26/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2434
E 04 12 51 58 64

ஜய
திகதி 2026.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 0354
B 0 3 7 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4328
சீட்டிழுப்பு திகதி | 26.01.2026
S 24 39 59 66
S

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.26
சீட்டிழுப்பு இலக்கம் 1395
சிம்மம் 07 39 43 44 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.01.2026 வெற்றி வாரம் 0794
P 8 0 3 3 9 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,839,299.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3060
சீட்டிழுப்பு திகதி 2026.01.26 தினம் திங்கட்கிழமை
28 42 70 76 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,975,240.80

சனிதா
திகதி 26.01.2026 வெற்றி வாரம் 5221
21 26 66 73 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,532,220.40

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 890
சீட்டிழுப்பு திகதி 26.01.2026 திங்கட்கிழமை
32 33 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,588,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4772
சீட்டிழுப்பு திகதி 26.01.2026 தினம் திங்கட்கிழமை
03 18 56 62 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,634,314.40

கப்ருக
B 09 16 17 48 67
சீட்டிழுப்பு வாரம் 2236
26.01.2026 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.623,700,875.40

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2886
சீட்டிழுப்பு திகதி: 2026.01.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,570,491.20
04 08 59 68 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை தேவை

01.நல்லூர், இந்து, 1990, மூலம், Graduated, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

02.புங்குடுதீவு, சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Graduated, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

03.நயினாதீவு - மல்லாகம், இந்து, 1991, சதயம், Graduated, Newzealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

04.காரைநகர், இந்து, 1992, மிருகஷீரிடம், Masters, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

05.இருபாலை, இந்து, 1993, திருவோணம், Masters, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

06.சாவகச்சேரி, இந்து, 1990, உத்திரட்டாதி, Graduated, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(35004)

07.சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Diploma in Arts phytologist, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(44161)

08.கொக்குவில், இந்து, 1994, விசாகம், Bsc(UK), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(50294)

09.அளவெட்டி, இந்து, 1996, உத்தரம், Bsc(Forensic Science), Msc (Toxicology), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(30340)

10.கொக்குவில், இந்து, 1994, மகம், MBBS, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(47776)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-4892)

**S.Sharma J.P** | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193

---

# வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சகல உணவுகளும் தயாரிக்கக்கூடிய வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(6659)

தொடர்புகளுக்கு :

**077 864 2772**

---

# பணிப்பெண் தேவை

கச்சாய் சந்திக்கு அருகாமையில் உடனடியாக பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(C-4890)

தொடர்புகளுக்கு :

**076 762 6055**

---

# மணமகன் தேவை

1999 கனடா, 1995 லண்டன், 1987 அவுஸ்திரேலிய போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்களுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன்கள் தேவை. தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.

(1988)

தொடர்புகளுக்கு :

**077 408 8241**

---

# வீட்டு உதவியாளர் தேவை

- குழந்தை கவனிப்பு
- சமையலில் உதவி

(சனி,ஞாயிறு தினங்களில் நிரந்தர வேலைவாய்ப்பு, ஏனைய தினங்கள் தேவைக்கு ஏற்ப)
8.00 AM - 5.00 PM
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(1990)

**076 272 2565**

---

# மணப்பெண் தேவை

01.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Graduate, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

02.அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

03.கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

04.மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, Computer Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

05.காரைநகர், இந்து, 1988, பரணி, Masters Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

06.இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

07.மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

08.காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, New Zerland + Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

09.குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, MBA Phd Director, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

10.மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-4892)

**S.Sharma J.P** | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4893)

**076 825 7716** (ஆகாஸ்)

---

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

---

# THE OPEN UNIVERSITY OF SRILANKA
# JAFFNA REGIONAL CENTRE

**Applications are invited from eligible candidates to enroll in the programmes offered by Jaffna Regional Centre of the Open University of Sri Lanka**

## Calling for Applications

Apply Before 10th February 2026

- ☑ Bachelor of Education (Honours) in Primary Education

## Calling for Applications

Apply Before 15th February 2026

- ☑ Bachelor of Science Hounours in Agricultural Engineering
- ☑ Bachelor of Science Honours in Civil Engineering
- ☑ Bachelor of Science Honours in Computer Engineering
- ☑ Bachelor of Science Honours in Electrical Engineering
- ☑ Bachelor of Science Honours in Electronics & Communication Engineering
- ☑ Bachelor of Science Honours in Mechanical Engineering
- ☑ Bachelor of Science Honours in Mechatronics Engineering
- ☑ Bachelor of Science Honours in Textile and Clothing Engineering
- ☑ Bachelor of Industrial Studies Honours in Agriculture
- ☑ Bachelor of Industrial Studies Honours in Apparel Production & Management
- ☑ Bachelor of Industrial Studies Honours in Fashion Design & Product Development
- ☑ Bachelor of Industrial Studies Honours in Textile Manufacture

(C-4888)

## Calling for Applications

Apply Before 1st February 2026

- ☑ Advanced Certificate in Science Programme
  ( Foundation Courses for Science & Engineering)

## Calling for Application for Short Courses

Apply Before 15th February 2026

- ☑ Certificate in Computer Literacy
- ☑ Short course in Human Resource Management
- ☑ Short Course in Listening & Speech in English

For further details
No. 303,
Brown Road,Kokuvil, Jaffna.

021 222 3374
+94 70 621 5112

web :
https://ou.ac.lk/

Registrar,
The Open University of Sri Lanka,
Nawala, Nugegoda.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.161, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org